216125

22 FEB 1989

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க,
# தேசிய சூழல் (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1988 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 2.70 தபாற் செலவு: ரூபா 1.15

216125

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க,
தேசிய சூழல் (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

22 FEB 1989

ச. வ.—ஒ 46/83
1773

## 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால்** பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, தேசிய சூழல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

***1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத்திருத்துதல்.***

2. (இதனகத்துப்பின்னர் 'முதன்மைச் சட்டவாக்கம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் விரிவுப் பெயர் " சூழலைப் பாதுகாப்பதற்கும் முகாமை செய்வதற்குமான ஏற்பாட்டைச் செய்வதற்கும் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " சூழலைப் பாதுகாப்பதற்கும், முகாமை செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும், சூழலின் தன்மையினை ஒழுங்குப்படுத்துவதற்கும், பேணுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், அத்துடன் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாட்டைச் செய்வதற்கும் " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் " அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக " அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் " அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் " என்னும் சொற்களுக்கும் பதிலாக "அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(ஈ) உரிமக்கட்டணமாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ண), (த) அத்துடன் (ந) ஆகிய பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (ண) வியாபாரம், கப்பற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

2 –ட 000660—3,525 (88/09)

(த) பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சரினது அமைச்சின் சிரேட்ட அலுவலர் ஒருவர்;

(ந) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ்த்தாபிக்கப்பட்ட மாகொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் சிரேட்ட அலுவலர் ஒருவர் ;

(ப) அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியாக அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற ஆள் ;

(ம) சூழற்றுறையில் உள்ள வலிந்துதவு முகவர் நிலையங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஏழு உறுப்பினர்கள்; அத்துடன்

(ய) சூழலைப்பாதுகாப்பதிலும், முகாமைசெய்வதிலும் போதிய நிபுணத்துவமும் அனுபவமுள்ள ஆட்களிடையேயிருந்து ஈருறுப்பினர்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்வதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை 10 ஆம் பிரிவு என மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(3) மீள இலக்கமிடப்பட்ட 10 ஆம் பிரிவின் (ஊ), (எ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க) ஆகிய பந்திகளை (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட), (ண) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) மீள இலக்கமிடப்பட்ட 10 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஊ) சூழலினுள் கழிவுகளையும் தீழ்ப்புப் பொருட்களையும் வெளிவிடுதல் அத்துடன் சூழலின் தன்மையைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் ஆகியன தொடர்பிலான ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகள் யாவற்றையும் ஒன்றிணைப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் ;

(எ) சூழலின் ஏதேனும் பகுதியின் தன்மைக்கு அபாயம் விளைவிக்கும் அல்லது சூழலுக்கு அபாயம் விளைவிக்கும் சாத்தியம் கொண்ட கழிவுகளின், வெளியேற்றலின், வெளிவிடுகைகளின், படிவுகளின் அல்லது தீழ்ப்பின் வேறு மூலங்களின் அல்லது உட மூலங்களின் கனவளவு. வகைகள், கூறுகள், தாக்கங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தலும், பேணுதலும், கட்டுப்படுத்துதலும் ;

(ஏ) புதிய கருத்திட்டங்களுக்கும், ஏலவேயுள்ள கருத்திட்டங்களிலான மாற்றங்கள் அல்லது அவற்றைக் கைவிடுதல் ஆகியவற்றுக்கும் ஆன முன்மொழிவுகளைச் சூழல்மீது அத்தகைய முன்மொழிவுகளின் நன்மைசார் மற்றும் பாதகமான தாக்கங்களை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்கென சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்துதல்;

(ஐ) ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் நியாயாதிக்க எல்லைகளினுள் சூழலின் பாதுகாப்புத் தொடர்பிலான எவையேனும் விதப்புரைகளுக்கும், அத்துடன் குறிப்பாகப் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் சூழல் சார் தீழ்ப்பு அமிசங்கள் தொடர்பிலான எவையேனும் விதப்புரைகளுக்கும் இணங்கியொழுகுமாறும், அவற்றைப் பயனுறுத்துமாறும் தேவைப்படுத்துதல்;

(i) குப்பை கூழங்களின், வீட்டுக் கழிவுப் பொருட்களின் அத்துடன் வடிகால் கழிவின் அதிகாரமளிக்கப்படாத வெளியேற்றலை, வெளிவிடுதலை அல்லது படிவைத் தடைசெய்தல்;

(ii) பரிகரிக்கப்படாத கழிவை அல்லது தரம் குறைந்த கைத்தொழில் நீரியற் கழிவுகளை அல்லது நச்சுத் தன்மையான இரசாயனப் பொருள்களை மண்ணுக்குள், கால்வாய்களினுள் அல்லது நீர்வழிகளினுள் வெளியேற்றுதலைத் தடுத்தல்;

(iii) சுவர்களின்மீது அல்லது கட்டடங்களின்மீது அல்லது அதிகாரமளிக்கப்படாத வேறு எவையேனும் இடங்களில் சுவரொட்டிகளை அல்லது பட்டியல்களை வெளிக்காட்டி வைத்தலைத் தடுத்தலும், அத்துடன் விளம்பரப்படுத்தும் விளம்பரப் பலகைகளை நிறுவுதலை ஒழுங்குபடுத்தலும்;

(iv) காட்சி இடங்களையும், பொது ஆதனங்களையும் உருவழித்தலைத் தடுத்தல்;

(v) வளிமண்டலத் தீழ்ப்பைக் கட்டுப்படுத்துதல்;

(vi) இரைச்சல் தீழ்ப்பைக் கட்டுப்படுத்துதல்; அத்துடன்

(vii) சுகாதாரத்திற்கும், சூழலுக்கும் கேடு விளைவிக்கும் ஏதேனும் பொருளைக் களஞ்சியப்படுத்துதலை, இடம்பெயர்த்தலும், கையுதிர்த்தலும்;

(ஒ) அதன் பணிகளைப் புரிவதில் உதவிசெய்வதற்கென விசேட குழுக்களை நியமித்தல்;"

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பொது முகாமையாளரொருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "பணிப்பாளர் தலைமையதிபதியொருவர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பொது முகாமையாளரானவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணிப்பாளர் தலைமையதி பதியானவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் "பொது முகாமையாளர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "பணிப்பாளர் தலைமையதிபதி," என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(4) அப்பிரிவின் ஓரக் குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன்மூலம் :—

"அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும், செயலாளரும், பணியாட்டொகுதியினரும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் IVஅ, IVஆ, IVஇ என்னும் புதிய பாகங்களை உட்புகுத்துதல்.**

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகங்கள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இவை பாகம் IVஅ, பாகம் IVஆ, பாகம் IVஇ ஆகிய பாகங்களாகப் பயனுறுதலும் வேண்டும் :—

## பாகம் IVஅ

### சூழற் பாதுகாப்பு

**சூழலினுள் கழிவை வெளியேற்றலை வெளிவிடுதலை அல்லது படியவிடுதலைத் தடைசெய்தல்.**

23அ. கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் இயைபான தேதி எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியிலிருந்து ஆள் எவரும்—

(அ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமனங்களுக்கும் வேறு கட்டளைகளுக்கும் இணங்கவன்றி, சூழலின் தீழ்ப்பை ஏற்படுத்துவதான கழிவை வெளியேற்றுதலோ படியவைத்தலோ வெளிவிடுதலோ ஆகாது.

உரிமமொன்றை வழங்குதல்.

23ஆ. (1) அதிகாரசபையானது விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதிகாரசபைக்கு அதற்காகச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீதும் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதன் மீதும் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமங்களுக்கும் கட்

டளைகளுக்கும் இணங்க சூழலினுள் கழிவை வெளியேற்றுவதற்கு, படியவைப்பதற்கு அல்லது வெளிவிடுவதற்கு எவரேனும் ஆளுக்கு அதிகாரம் வழங்கி அத்தகைய ஆளுக்கு உரிமமொன்றை வழங்கலாம்.

(2) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும்—

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அத்துடன் அத்தகைய நியமங்களுக்கும் அமைந்ததாகவிருத்தல் வேண்டும் ;

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும் ; அது பன்னிரண்டு மாதங்கள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு மேற்பட்டதாக இருத்தலாகாது ; அத்துடன்

(ஈ) மீளப் புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

அதிகாரசபை விண்ணப்பத்தை ஓர் அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றுப் படுத்தலாம்.

23இ. (1) அதிகாரசபை, 23ஆ என்னும் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்பேரில், அவசியமென அது கருதுகின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பத்தின்மீது அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள்விடுத்து, அத்தகைய விண்ணப்பத்தைத் தோதான அரசாங்கத் திணைக்களமொன்றுக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஓர் அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பமொன்று ஆற்றுப்படுத்தப்படுகின்றவிடத்து, அதிகாரசபை, அத்தகைய திணைக்களத்திடமிருந்து அல்லது கூட்டுத்தாபனத்திடமிருந்து அத்தகைய விண்ணப்பம் தொடர்பான அறிக்கை அதற்குக் கிடைக்கின்றவரை, அதன்மீதான முடிபெதையும் எடுத்தலாகாது.

உரிமத்தை இடைநிறுத்தி வைத்தல் அல்லது இல்லாதாக்குதல்.

23ஈ. இப்பாகத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டிருந்து அத்தகைய ஆள் உரிமத்தின் எவையேனும் நியதிகளையும் நியமங்களையும் நிபந்தனைகளையும், மீறிச் செயலாற்றுமிடத்து அல்லது உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து பெறும் சூழலானது இயற்கைக் காரணிகளால் அல்லது வேறுவகையாக மாற்றப்பட்டுள்ளவிடத்து அல்லது மாறியுள்ளவிடத்து அல்லது உரிமத்தின் அதிகாரத்தின்கீழ் சூழலினுள் அழிவைத் தொடர்ந்து வெளியேற்ற படியவிடல் அல்லது வெளியிடுதல் நன்மைபயக்கும் பயன்பாடெதனையும் பாரதூரமாகப் பாதிக்குமிடத்து அல்லது பாதிக்கக் கூடியதாகவிருக்குமிடத்து.".

உரிமங்களை மறுத்தற்கெதிரான மேன்முறையீடுகள் முதலியன.

23உ. (1) அதிகாரசபை உரிமமொன்றை வழங்க மறுப்பதினால் இன்னலுறுபவரான இப்பாகத்தின் கீழான உரிமமொன்றுக்கான எவரேனும் விண்ணப்பதாரர் அல்லது இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவரும் அவ்வாறு வழங்கப்பட்ட உரிமமொன்றை இடைநிறுத்துவதினால் அல்லது இல்லாதாக்குவதினால் அல்லது புதுபிக்க மறுப்பதினால் இன்னலுறுபவருமான எவரேனும் ஆள், அத்தகைய முடிபு பற்றிய அறிவித்தற்றேதியின் பின்னர் முப்பது நாட்களினுள், விடயத்திற்கேற்ப, அத்தகைய மறுப்பிற்கு, இடைநிறுத்தத்திற்கு, இல்லாதாக்குதலுக்கு அல்லது புதுப்பிக்க மறுத்தலுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(2) அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் மீது அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

## பாகம் IVஆ

## சூழற்றன்மை

திவின் நீர்ப்பரப்பு தீழ்ப்படைவதை மட்டுப்படுத்தலும், ஓழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும்.

23ஊ. இச்சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவுக்கு அமைவாக, இயைபான தேதியிலிருந்து இச்சட்டத்தீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமங்களுக்கு அல்லது கட்டளைக்கு இணங்கவன்றி, இலங்கையின் உள்நாட்டு நீர்ப்பரப்பினுள் கழிவுகளை ஆள் எவரும் படியவிடுதலோ அல்லது வெளிவிடுதலோ ஆகாது.

இலங்கையின் உள்நாட்டு நீர்ப்பரப்பு தீழ்ப்படைதல்.

23எ. (1) நீர்ப்பரப்பு அல்லது அதன் ஏதேனும் பகுதி மனிதரின் உடநலத்தையோ, சேமநலத்தையோ, பாதுகாப்பையோ அல்லது ஆதனத்தையோ துப்பரவற்ற தாக்கும் தீங்கானதாக்கும் நச்சுத்தன்மையான தாக்கும், அசுத்தமானதாக்கும், அல்லது அதற்கு தீங்கு விளைவிப்பதாக்கும் வண்ணம் அல்லது அவ்வாறு ஆக்

கப்படுமென எதிர்பார்க்கக்கூடிய வண்ணம் அல்லது மிருகங்களுக்கு, பறவைகளுக்கு, விலங்கினங்களுக்கு, மீன்களுக்கு, தாவரங்களுக்கு அல்லது வேறு வகையான உயிரினங்களுக்கு நச்சுத்தன்மையாகும் வண்ணம் அல்லது தீங்கு விளைவிக்கும் வண்ணம் அல்லது அந்த நீர்ப்பரப்புகளின் ஏதேனும் பயன்தரு பாவனைக்குத் தீங்கு விளைவிக்கும் வண்ணம் அந்த நீர்ப்பரப்பின் பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் நிலைமைகளை மாற்றக்கூடியவாறு ஆள் எவரும் இலங்கையின் ஏதேனும் உள்நாட்டு நீர்ப்பரப்புக்களை திழ்ப்படையச் செய்தலோ அல்லது திழ்ப்படையைச் செய்வித்தலோ, செய்விக்க அனுமதித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்கு மட்டுப்பாடின்றி, ஆள் ஒருவர்—

(அ) ஏதேனும் நீர்ப்பரப்பினுள் அல்லது நீர்ப்பரப்பின் மீது அல்லது ஏதேனும் நீர்ப்பரப்பை அணுகக்கூடிய ஏதேனும் இடத்தில் இச்சட்டத்தினல் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினல் தடைசெய்யப்பட்ட ஏதேனும் பொருளை அது திண்மமாயினுஞ்சரி, திரவமாயினுஞ்சரி அல்லது வாயுவாயினுஞ்சரி இடுவராகில்;

(ஆ) திண்மமான, திரவமான அல்லது வாயுவான ஏதேனும் கழிவுப்பொருளை, அது ஏதேனும் நீர்ப்பரப்பினுள் அல்லது ஏதேனும் ஆறு நீரோடை அல்லது நீர்வழி வற்றியிருக்கும்போது அதன்மீது விழுகின்ற, இறங்குகின்ற, வடிக்கின்ற, ஆவியாகின்ற, கழுவிச் செல்லப்படுகின்ற, காற்றினல் அடித்துச் செல்லப்படுகின்ற அல்லது ஊறிச்செல்கின்ற ஒரு நிலையில் அல்லது அவ்வாறு விழும், இறங்கும், வடியும். ஆவியாகும், கழுவிச்செல்லப்படும், காற்றினல் அடித்துச் செல்லப்படும் அல்லது ஊறிச்செல்லும் சாத்தியம் கொண்ட ஒரு நிலையில் இடுவாராகில் அல்லது அறிந்துகொண்டோ அல்லது அவரது அசட்டைமூலமாகவோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அத்தகைய ஏதேனும் பொருளை அத்தகைய ஒரு நிலையில் இட்டு வைப்பித்தால் அல்லது இட்டு வைப்பதற்கு அனுமதித்தால்;

(இ) ஏதேனும் ஆறு, நீரோடை அல்லது வேறு நீர்வழி வற்றியிருக்கும்போது அதன் படுக்கை மீது கழிவை அவர் விடுவாராகில் அல்லது அறிந்துகொண்டோ அல்லது அவரது அசட்டை மூலமாகவோ அத்தகைய ஒரு படுக்

கையின்மீது ஏதேனும் கழிவை இட்டு வைப்பித்தாராகில் அல்லது வைப்பிக்க அனுமதியளிப்பாராகில்; அல்லது

(ஈ) அவர், இலங்கையின் உள்நாட்டு, கரையோர அல்லது கரைக்கு அப்பாலுள்ள நீர்ப்பரப்புகளின் வெப்பநிலையை விதித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகளிலும் கூடுதலாக அதிகரிக்கச் செய்விப்பாராயின், குறைக்கச் செய்விப்பாராயின்,

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஒவ்வோர் ஆளும் தவறு ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்—

(அ) பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப் பணத்திற்கும் அத்துடன் அதன் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் சந்தர்ப்பத்தில் அத்தவறு அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவிலான ஒரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றத்தினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய காலத்தினுள் இலங்கையின் உள்நாட்டு, கரையோர, கரைக்கப்பால் உள்ள நீர்ப்பரப்புகளுக்கு மேலும் சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அவசியமானதெனக் கருதப்படக் கூடியவாறுன அத்தகைய திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறும் அத்துடன் அத்தகைய காலத்தின் இறுதியில் அத்தகைய திருத்த நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டமைக்கான போதிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய எண்பிப்பைக் கொடுத்துதவுமாறும் தேவைப்படுதலும் வேண்டும். குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட அத்தகைய ஆளை நீதிமன்றம், அத்தகைய தவறைப் புரிந்ததன் விளைவாக ஏற்கனவே உறப்பட்ட சேதத்தை திருத்துவதில் அதிகார சபைக்கு ஏற்பட்டிருக்கக்கூடியவாறுன செலவுகளை ஏற்றுக்கொள்ளுமாறும், அத்துடன் அவ்வாறு உறப்பட்ட செலவுகளை ஏற்றுக்கொள்ள அத்தகைய ஆள் தவறுமிடத்து அச்செலவுகளை நீதிமன்றத்தினுல் விதிக்கப்படும் குற்றப்பணமொன்று என்றாற் போன்று அதே முறையில் அறவிடப்படல் வேண்டுமெனவும் கட்டளையிடுதல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் கீழ் தவறென்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவரது குற்றத் தீர்ப்புத் தேதியிலிருந்து ஆறு வார காலமொன்றின் பின்னர் அத்தகைய தவறைத் தொடர்ந்து புரியுமிடத்து, பணிப்பாளர் தலைமைபதிபதியினால் அவர் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்ட மூடுவதற்கான விண்ணப்பமொன்றின் மீது மேலும் சேதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான போதிய திருத்த நடவடிக்கைகளை அத்தகைய ஆள் எடுக்கும் அத்தகைய காலம் வரை இலங்கையின் உள்நாட்டு, கரையோர அல்லது கரைக்கப்பாலுள்ள நீர்ப்பரப்புகளில் தீழ்ப்பை ஏற்படுத்திய அத்தகைய வளவுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அத்தகைய தொழிற்சாலையை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை மூடுவதற்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட மூடுதற் கட்டளையுடன் இணங்கியொழுக அத்தகைய ஆள் தவறுகின்ற ஏதேனும் விடயத்தில், நீதிவான் கட்டளை வழங்கிய தேதியிலிருந்து மூன்று தெளிவான நாட்களுக்கு முந்திய அல்லது ஏழு தெளிவான நாட்களுக்குப் பிந்திய தேதியொன்று அல்லாததான அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் அத்தகைய வளவில் நடைபெறும் அத்தகைய தொழிற்சாலையை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை மூடுமாறு நீதிமன்றத்தின் பிசுக்காலைத் தேவைப்படுத்தியும் அதிகாரம் வழங்கியும் அத்தகைய பிசுக்காலுக்கு உடனடியாகக் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய வளவுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அத்தகைய தொழிற்சாலையை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை மூடுவதற்குத் தேவையானதென பிசுக்கால் அல்லது அத்தகைய பொலிசு அலுவலர் கருதுகின்றவாறான அத்தகைய உதவியாளர்களுடன் வளவினுள் நுழைவதற்குச் சொல்லப்பட்ட பிசுக்காலுக்கு அல்லது அதன் சார்பில் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு அத்தகைய கட்டளை போதுமான அதிகாரமாகவிருத்தல் வேண்டும்.

வளிமண்டலத் தீழ்ப்பின்மீதான மட்டுப்பாடு.

23ஐ. இச்சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவிற்கு அமைவாக இயைபான தேதியிலிருந்து ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியமங்களுக்கு அல்லது கட்டளைகளுக்கு இணங்கவன்றி வளிமண்டலத்தினுள் கழிவை வெளியேற்றுதல் அல்லது வெளிவிடுதல் ஆகாது.

வளிமண்டலத் தீழ்ப்பு.

23ஒ. (1) ஆளெவரும் வளிமண்டலம் அல்லது அதன் ஏதேனும், பாகம் மனிதர்களின் உடல் நலத்தையோ சேம நலத்தையோ, பாதுகாப்பையோ அல்லது ஆதனத்தையோ துப்பரவற்றதாக்கும், தீங்கானதாக்கும்,

நஞ்சுத் தன்மையானதாக்கும், அசுத்தமானதாக்கும் அல்லது அதற்கு தீங்கு விளைவிப்பதாக்கும் வண்ணம் அல்லது அவ்வாறு ஆக்கப்படும் என நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய வண்ணம் அல்லது மிருகங்களுக்கு, பறவைகளுக்கு, விலங்கினங்களுக்கு, தாவரங்களுக்கு அல்லது வேறு எல்லாவகை உயிரினங்களுக்கும் நச்சுத் தன்மையாகும் வண்ணம் அல்லது தீங்கு விளைவிக்கும் வண்ணம் அல்லது அந்த வளிமண்டலத்தின் ஏதேனும் பயன்தரு பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் வண்ணம் அந்த வளிமண்டலத்தின் பௌதீக இரசாயன அல்லது உயிரியல் நிலைமையை மாற்றக்கூடியதாக வளிமண்டலத்தை தீழ்ப்படையச் செய்தலோ அல்லது தீழ்ப்படையச் செய்வித்தலோ அல்லது செய்விக்க அனுமதித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்கு மட்டுப்பாட்டின்றி, ஆளெவரும்—

(அ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் வளிமண்டலத்தில் வைக்கப்படலாகாது எனத் தடைசெய்யப்பட்ட ஏதேனும் பொருளை திரவமாயினுஞ்சரி, திண்மமாயினுஞ்சரி அல்லது வாயுவாயினுஞ்சரி, வளிமண்டலத்தில் வைத்தால் அல்லது வளி மண்டலத்தினுள் விடுவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் வைத்தால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அதற்காக விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாதிருப்பின்;

(ஆ) அவற்றின் தன்மை, செறிவு, கனவளவு அல்லது அளவு காரணமாக மனிதர்களின் உணர்ச்சிகளுக்குத் தீங்காக, தகாத அருவருப்பாக இருக்கக்கூடிய மணத்தை வெளியேற்றுவித்தால் அல்லது வெளியேற்றுவிக்க அனுமதித்தால்;

(இ) விதித்துரைக்கப்பட்ட காலங்களிலும், முறையிலும் அல்லது இடத்திலும் அல்லாத வேறு வகையில் கழிவை எரித்தால்;

(ஈ) தீழ்ப்பைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அத்தகைய எந்திரத்திற்கு பொருத்தப்பட வேண்டுமென ஒழுங்கு விதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் உபாயம் பொருத்தியமைக்கப்படாததான உள்ளகத்தான எந்திரமொன்றை அல்லது எரிபொருள் எரித்தற் சாதனமொன்றை அவர் பயன்படுத்தினால்; அல்லது

(உ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் தடை செய்யப்பட்ட ஏதேனும் எரிபொருளை அவர் பயன்படுத்தினால் அல்லது எரித்தால்,

அவ்வுட்பிரிவை மீறியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஒவ்வோர் ஆளும் தவறு ஒன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்—

(அ) பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப் பணத்திற்கும் அத்துடன் அதன்பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் சந்தர்ப்பத்தில், அத் தவறு அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவிலான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வளிமண்டலத் தீழ்ப்பினால் மேலும் சேதமேற்படுவதைத் தடுப்பதற்கு அவசியமானதென கருதப்படக்கூடியவாறான அத்தகைய திருத்த நடவடிக்கைகளை நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் எடுப்பதற்கும், அத்தகைய திருத்த நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டமைக்கான போதிய ஏற்றுக்கொள்ளக் கூடிய எண்பிக்கை அத்தகைய கால இறுதியில் கொடுத்துதவுமாறும் தேவைப்படுத்தப்படல் வேண்டும். நீதிமன்றமானது, அத்தகைய தவறைப் புரிந்ததன் விளைவாக ஏற்கனவே கூறப்பட்ட சேதத்தைத் திருத்துவதில் அதிகாரசபையினால் உறப்பட்ட செலவுகளையும் ஏற்றுக்கொள்ளுமாறு அத்தயை குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அவரது குற்றத்தீர்ப்புத் தேதியிலிருந்து ஆறு வார காலத்தின் பின்னர் அத்தகைய தவறைத் தொடர்ந்து புரியுமிடத்து, நீதிமன்றம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் மூடிவிடுவதற்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன் மேல், மேலும் சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு போதிய திருத்த நடவடிக்கைகளை ஆள் எடுக்கின்ற அத்தகைய காலம்வரையில் வளிமண்டலத் தீழ்ப்பை

ஏற்படுத்துவதான அத்தகைய வளவுகளில் நடைபெறுகின்ற அத்தகைய தொழிற்சாலையை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை, மூடுவதற்குக் கட்டளையிடலாம்.

(5) அத்தகைய ஆள் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட மூடுதற் கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில், நீதிவான், அத்தகைய கட்டளை வழங்கிய தேதியிலிருந்து மூன்று தெளிவான நாட்களுக்கு முந்திய தேதியொன்று அல்லது ஏழு தெளிவான நாட்களுக்குப் பிந்திய தேதியன்று அல்லாததான அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் அத்தகைய வளவுகளில் நடைபெறுகின்ற அத்தகைய தொழிற்சாலையை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை மூடுமாறு நீதிமன்ற பிசுக்காலைத் (தேவைப்படுத்தியும் அத்தகைய பிசுக்காலுக்கு அதிகாரம் வழங்கியும் உடனடியாகக் கட்டளையை வழங்குதல் வேண்டும். அத்தகைய வளவுகளில் நடைபெறுகின்ற அத்தகைய தொழிற்சாலையை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை மூடுவதற்கு அவசியமென பிசுக்கால் அல்லது அத்தகைய பொலிஸ் அலுவலர் கருதுகின்றவாறான அத்தகைய உதவியாளர்களுடன் வளவுகளில் நுழைவதற்கு சொல்லப்பட்ட பிசுக்காலுக்கு அல்லது அதன் சார்பில் அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு அத்தகைய கட்டளை போதிய அதிகாரமளித்திருத்தல் வேண்டும்.

விதித்துரைக்கப்பட்ட கட்டுப்பாட்டு உபாயங்களைப் பொருத்துவதற்கும் பேணுவதற்கும் தவறுதல் தவறொன்றாகும்.

23ஓ. வளிமண்டலங்களின் தீழ்ப்பைத் தடுப்பதற்கான அல்லது மட்டுப்படுத்துவதற்கான ஏதேனும் உபாயத்துடன் கட்டப்பட்ட, பொருத்தப்பட்ட அல்லது சாதனமிடப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் எந்திரத் தொகுதியை, வாகனத்தை அல்லது வள்ளத்தை அத்தகைய எந்திரத்தொகுதி வாகனம் அல்லது அவ்வாறு கட்டப்படாத, பொருத்தப்படாத அல்லது சாதனமிடப்படாத நிலையில் சொந்தமாக வைத்திருக்கின்ற, பயன்படுத்துகின்ற, இயக்குகின்ற, நிருமாணிக்கின்ற, விற்கின்ற, நிறுவுகின்ற அல்லது விற்பதற்கு அல்லது நிறுவுவதற்கு முனைகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். இப்பிரிவின்கீழ் கட்டப்பட்ட, பொருத்தப்பட்ட அல்லது சாதனமிடப்பட்ட எல்லா உபாயங்களும் சொந்தக்காரர்களின் செலவில் பேணம்படுதலும் இயக்கப்படுதலும் வேண்டும்.

மண்தீழ்ப் படைவதை மட்டுப் படுத்தலும் ஒழுங்கு படுத்தலும் கட்டுப்படுத் தலும்.

23ஔ. இச்சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவிற்கு அமைவாக, இயைபான தேதியிலிருந்து, இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியமங்களுக்கும் அல்லது கட்டளைகளுக்கு இணங்கவன்றி, ஆள் எவரும் மண்ணினுள் கழிவை வெளியேற்றுதல் அல்லது படியவிடுதலாகாது.

மண்ணைத் தீழ்ப்படையச் செய்தல் தவறென்றுதல்.

23க. (1) மண் அல்லது நிலத்தின் மேற்பரப்பு, மனிதர்களின் உடல்நலத்தையோ, சேமநலத்தையோ, நச்சுத்தன்மையானதாக்கும், அல்லது அசுத்தமானதாக்கும், திங்கானதாக்கும் அல்லது தீங்காக்கும் சாத்தியம் கொண்டதாகும் வண்ணம் அல்லது அவ்வாறு ஆக்கப்படும் என எதிர்பார்க்கக் கூடியவண்ணம் அல்லது மிருகங்களுக்கு, பறவைகளுக்கு, விலங்கினங்களுக்கு, தாவரங்களுக்கு அல்லது வேறு வகையான உயிரினங்களுக்கு நச்சுத்தன்மையாகும் வண்ணம் அல்லது தீங்கு விளைவிக்கும் வண்ணம் அல்லது மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு தீங்கானதாக்கும் வண்ணம் அல்லது தகாத அருவருப்பானதாகும் வண்ணம் அல்லது நிலத்தின் ஏதேனும் பயனுறு பாவனைக்கு தீங்குவிளைவிக்கும் வண்ணம் அந்த மண்ணின் அல்லது நிலத்தினது மேற்பரப்பின் பௌதிக, இரசாயன அல்லது உயிரியல் நிலைமையை மாற்றக்கூடியவாறு, ஆள் எவரும் ஏதேனும் மண்ணை அல்லது ஏதேனும் நிலத்தின் மேற்பரப்பை தீழ்ப்படையச் செய்வித்தல் அல்லது செய்விக்க அனுமதித்தல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்கு மட்டுப்பாடின்றி, ஆள் ஒருவர்—

(அ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் தடைசெய்யப்பட்ட ஏதேனும் பொருளை, அது திரவமாயிருந்தாலுஞ்சரி, திண்மமாயினுஞ்சரி, அல்லது வாயுவாயினுஞ்சரி ஏதேனும் மண்ணில் அல்லது மண்ணின் மீது அல்லது ஏதேனும் மண்ணை அணுகக் கூடிய ஏதேனும் இடத்தில் வைத்தால் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி யொழுகாவிட்டால் ; அத்துடன்

(ஆ) மனித உணர்ச்சிகளுக்கு தீங்கானதாகும் அல்லது தகாத அருவருப்பானதாகும் வண்ணம் அல்லது நிலத்திற்குக் கீழான நீரை தீழ்ப்படையச் செய்யும் அல்லது பங்கமாகப் பாதிக்கும் வண்ணம் அல்லது மண்ணின் அல்லது நிலத்தின் மேற்பரப்பின் ஏதேனும் பயன்தரு

பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் வண்ணம் அவர் ஏதேனும் காணியில் ஒரு குப்பைக் குவியலை, வீட்டுக் கழிவுப் பொருட்கள் முனையை, மண், பாறை, கையுதிர்ப்பு இடங்களை, சேறு படியும் அமைவிடத்தை, கழிவு உட்செலுத்துகைக் கிணற்றை நிறுவியமமைத்தால் அல்லது பிறவாறு திண்ம அல்லது திரவக் கழிவுகளை கையுதிர்ப்பிற்கு அல்லது சேர்த்து வைப்பதற்குக் காணியைப் பயன்படுத்தினால்,

அவ்வுட்பிரிவை மீறியவரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எவ்வாறாயினும் தரப்பட்ட ஒரு பீடையைக் கட்டுப்படுத்துவதற்கென அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பொன்றினை விதித்துரைக்கப்பட்ட ஒரு முறையில் பயன்படுத்துதல் போன்ற அத்தகைய செல்லுபடியான காரணங்களுக்காக முன்னரான விதிவிலக்குகள் வழங்கப்படலாம். ஆனால், அத்தகைய கையாளுகை மண்ணைக் கடுமையாகச் சேதப்படுத்துதலாகாது.

(4) இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப் பணத்திற்கும் அத்துடன் தவறு தொடர்ந்து புரியப்படும் சந்தர்ப்பமொன்றில் குற்றத் தீர்ப்பின் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபா குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

இரைச்சல் தீம்பை மட்டுப் படுத்துதல்.

23ஞ. இச்சட்டத்தின் 24ஆ என்னும் பிரிவிற்கு அமைவாக இயைபான தேதியிலிருந்து ஆள் எவரும் இரைச்சலின் அளவு, செறிவு அல்லது தன்மை தொடர்பாக விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியமங்களுடன் அல்லது மட்டுப்பாடுகளுடன் இணங்கியொழுகிலன்றி, மிதமிஞ்சிய இரைச்சல் வெளியிடப்படுதலை அனுமதித்தலாகாது.

குறித்த சில இரைச்சலின் வெளியேற்றத்திற்கு உரிமம் வழங்குதல்.

23ச. (1) ஆள் எவரும், இச்சட்டத்தின்கீழ் அதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, சகிக்கக்கூடிய இரைச்சலுக்கு விதித்துரைக்கப்பட்ட மட்டங்களிலும் கூடுதலான அளவு கொண்ட, செறிவு கொண்ட அல்லது தன்மைகொண்ட இரைச்சலை இடுதலோ அல்லது வெளிவிடுதலோ அல்லது இடச்செய்வித்தலோ வெளிவிடச் செய்வித்தலோ அல்லது அவ்வாறு செய்விக்க அனுமதித்தலோ ஆகாது.

(2) பிரிவுகள் 23ஆ, 23இ, 23ஈ, 23உ ஆகியவற்றின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றின் வழங்கலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களுள் எது தொடர்பாகவும் உரிமங்கள் வழங்குவதற்கு வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபை அல்லது நிறுவனம் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

மீதமிஞ்சிய இரைச்சல் தவறொன்றாகும்.

23ஞ. (1) உரிமமொன்று இல்லாமல், அல்லது இச்சட்டத்தின் கீழான அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான உரிமமொன்று எந்த நிபந்தனைக்கு, வரையறைக்கு அல்லது மட்டுப்பாட்டிற்கு அமைந்ததாகவுள்ளதோ அந்த நிபந்தனைக்கு, வரையறைக்கு அல்லது மட்டுப்பாட்டிற்கு முரணுகை சூழ்நிலையில் சகிக்கக்கூடிய இரைச்சலின் வெளிவிடுகைக்கென விதித்துரைக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அளவுக்கு, செறிவுக்கு அல்லது தன்மைக்குக் கூடுதலான இரைச்சலை இடுகின்ற அல்லது வெளிவிடுகின்ற அல்லது இடுவிக்கின்ற அல்லது வெளியிடுவிக்கின்ற அல்லது அவ்வாறு இட அல்லது வெளிவிட அனுமதிக்கின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியான எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபா குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

குப்பை கூளங்களை அகற்றுவதற்கான அறிவித்தல்.

23ட. எதேனும் இடத்தில் அது பொதுவானதாயினுஞ்சரி அல்லது தனிப்பட்டதாயினுஞ்சரி படியவிடப்பட்ட ஏதேனும் குப்பைகூளம், பொது மக்களின் உடல் நலத்துக்கு பாதுகாப்புக்கு அல்லது சேமநலனுக்கு தீங்குவிளைவிக்கும் அல்லது மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு மிக அருவருப்பானதாகும் அல்லது சூழலுக்கு இடையூறு விளைவிக்கும் சூழ்நிலைகளோ அல்லது அவ்வாறாகும் சாத்தியம் கொண்ட சூழ்நிலைகளோ உள்ளனவென அதிகார சபை கருதுகின்றவிடத்து, அது எழுத்துமூலமான அறிவித்தல்மூலம், அத்தகைய குப்பை கூளத்தை இடுவதற்குப் பொறுப்பாகவிருந்த ஆளை, அல்லது அத்தகைய குப்பை கூளத்தை கையுதிர்க்கும் அல்லது அகற்றும் பணியைக் கொண்டுள்ள எவரேனும் பொது அதிகாரியை, அத்தகைய குப்பை கூளத்தை அகற்றுமாறு அல்லது அறிவித்தலில் குறித்

துரைக்கப்பட்டவாறாக அத்தகைய குப்பை கூளம் தொடர்பிலான அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு பணிக்கலாம்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "குப்பை கூளம்" என்பது உற்பத்தி நடைமுறை ஒன்றின் போது எழுந்த ஒரு துணை உற்பத்திப் பொருளாயிருப்பினுஞ்சரி அல்லது தனது வழமையான வேலைக்காலத்தைக் கடந்ததும், கைவிடப்பட்டதுமான ஓர் உற்பத்திப் பொருளாயிருப்பினுஞ்சரி, தேவையற்ற கழிவுப்பொருள் எனப் பொருள்படும்.

குப்பை கூளத்தை அகற்றும் செலவு பொறுப்பாகவிருக்கும் ஆளுக்கெதிராக அறவிடப்படவேண்டும்.

23ண. பிரிவு 23ட என்பதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஓர் அறிவித்தலைப் பின்பற்றி குப்பை கூளத்தை அகற்றுவதற்கான அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலுக்கான அல்லது குறைப்பதற்கான செலவு, தகுதி வாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஏதேனும் நீதிமன்றத்தில், குப்பைகூளத்தைப் படியவிட்டுள்ளாரென எண்பிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கெதிராக அதிகார சபைக்கு வருமதியான கடனாக அறவிடப்படலாம்; அத்துடன் அறவிடப்பட்டவுடன் அதிகாரசபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுதல் தவறொன்றாகும்.

23த. பிரிவு 23ட என்பதன்கீழ் எழுத்தில் அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்ட எவரேனும் ஆள் நியாயமான காரணமின்றி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, எண்பிக்கப்பட்டால் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இலங்கையின் உள்நாட்டு நீர்ப் பரப்பினுள் எண்ணெய் வெளியேற்றப்படுதலைத் தடைசெய்தல்.

23ந. (1) ஆள் எவரும், ஏதேனும் எண்ணெயை அல்லது எண்ணெயுள்ள கலவையை இலங்கையின் உள்நாட்டு நீர்ப்பரப்பினுள் வெளியேற்றுதலோ அல்லது ஊற்றுதலோவாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

ஏதேனும் பொருளை அல்லது சாதனத்தைப் பயன்படுத்துவதை தடை செய்வதற்கான அல்லது தேவைப்படுத்துவதற்கான தத்துவம்.

23ப. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலமும், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளினுள் சூழலின் தன்மையைப் பாதிப்பனவான அல்லது பாதிப்பதான—

(அ) எவையேனும் பொருட்களை ஏதேனும் நடைமுறைக்கு வியாபாரத்திற்கு அல்லது கைத் லது வியாபாரப் பெயர்மூலமாயினுஞ்சரி செய்யலாம் ;

(ஆ) ஏதேனும் சாதனத்தை அல்லது கைத்தொழில்சார் பொறித்தொகுதியைப் பயன்படுத்துவதை விவரணத்தின் மூலமாயினுஞ்சரி அல்லது வியாபாரப் பெயர்மூலமாயினுஞ்சரி தடைசெய்யலாம்.

(2) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளினுள் ஏதேனும் சாதனத்தை அல்லது கைத்தொழில்சார் பொறித்தொகுதியை நிறுவும்படி, பழுதுபார்க்கும்படி, பேணிவரும்படி, அல்லது இயக்கும்படி தேவைப்படுத்தலாம்.

(3) (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையிலுள்ள ஏதேனும் தடையை மீறுகின்ற அல்லது ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

சான்றிதழானது அதனகத்துக் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாதல்.

23ம. இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கொன்றில், சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பு சூழலுக்கு ஏற்பட்டுள்ளதெனும் பயன்பட அமைந்ததான பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட சான்றிதழொன்று சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதனகத்து அடங்கியுள்ள விடயங்கள் பற்றிய முதற்றோற்ற சான்றாகவிருத்தலும் வேண்டும்.

## பாகம் IVஇ

### கருத்திட்டங்களின் அங்கீகாரம்

கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையங்கள்.

23ய. இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையங்கள்" எனக் குறிப்பிடப்படும்) அரசாங்க முகவர் நிலையங்களைக் குறித்துரைக்கலாம். அவை கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையங்களாயிருத்தல் வேண்டும்.

விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள்.

23ர. அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகாரம் அவசியமாகவிருக்கும் (இதனகத்துப் பின்னர் "விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கருத்திட்டங்களையும், பொறுப்புமுயற்சிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான அங்கீகாரம்.

23ல. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்தும், வந்தபின்னரும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால், கூட்டுத்தாபனத்தினால் நியதிச்சட்ட முறையான சபையினால், உள்ளூர் அதிகாரசபையினால், கம்பனியால், குழுமத்தினால் அல்லது தனியாளினால் இலங்கையில் பொறுப்பேற்கப்படும் விதித்துரைக்கப்பட்ட எல்லாக் கருத்திட்டங்களும், அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இச்சட்டத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும் என தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகாரம், அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் சம்பந்தமான அல்லது தொடர்பான, தோதான கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையங்களிடமிருந்து பெறப்படல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டிய குறித்த சில விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில் கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையமானது, அதிகார சபையின் ஒருப்பாட்டுடன் மாத்திரமே அதன் அங்கீகாரத்தை வழங்கும்.

சூழல் தாக்கம் பற்றி மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

23வ. அதனது அங்கீகாரத்திற்கு ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தை, நியதிச் சட்டமுறையான சபையை, உள்ளூராட்சி அதிகார சபையை, கம்பனியை, குழுமத்தை அல்லது தனியாளை, குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்தினுள் அத்தகைய கருத்திட்டம் தொடர்பில் கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அந்நோக்கத்திற்கென அமைச்சரினால் விதித்துரைக்கப்

படக்கூடியவாறுனதும் அத்தகைய தகவலேயும் விவ ரங்களேயும் கொண்டிருப்பதுமான சூழல் பரிசோதனே ஆரம்ப அறிக்கையொன்றை அல்லது சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீடொன்றைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்துதல் எல்லாக் கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலேயங்களினதும் கடமையாதல் வேண்டும்,

(2) கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலேயம் ஒன்று (1) ஆம் உட்பிரிவின் கீழ் சுமத்தப்பட்ட தேவைப் பாட்டுடன் இணங்க அத்தகைய கருத்திட்ட அங்கீ கரிப்பு முகவர் நிலேயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விட யத்திற்கேற்றவாறு சூழல் பரிசோதனே ஆரம்ப அறிக் கையொன்றை அல்லது சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீடு அறிக்கையொன்றைப் பெற்றதன் மேல், கசெற்றிலும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஒவ்வொரு புதி னப்பத்திரிகையிலும் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அத்தகைய அறிக்கையானது பொதுமக்களின் பார்வைக்கு எந்த இடத்திலும் எந்நேரத்திலும் கிடைக்கப்படற்பாலதாதல் வேண்டுமென்பதை அறி வித்தல் வேண்டுமென்பதுடன், அதுபற்றி ஏதேனும் கருத்துரை எவையேனும் இருந்தால் அவற்றை வழங்கு மாறு பொதுமக்களே அழைத்தலும் வேண்டும்.

(3) பொதுமக்களுள் எவரும், (2) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்று கசெற்றில் வெளியிடப் பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், அத் த்கைய அறிவித்தல் வெளியிட்ட கருத்திட்ட அங்கீ கரிப்பு முகவர் நிலேயத்திற்கு அவரது கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றை வழங்கலாம் என்பது டன், அத்தகைய கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலேயமானது அவரது கருத்துரைகளுக்கு ஆதாரமாக விசாரிக்கப்படுவதற்கு எவரேனும் அத்தகைய ஆளுக்கு பொது அக்கறை கருதி தோதானதெனக் கருதுமி டத்து சந்தர்ப்பமொன்றை அளிக்கலாமென்பதுடன் அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான அதன் அங்கீகாரத்தை வழங்குவதா அல்லவா என்பது பற்றித் தீர்மானிப்ப தற்கு அத்தகைய கருத்துரைகளேயும் அத்துடன் ஏதே னும் அத்தகைய விசாரணேயில் வெளிக்கொணரப்பட்ட வேறு விடயங்கள் எவையேனுமிருப்பின் அவற்றை யும் கருத்திற்கொள்ளலும் வேண்டும்.

(4) ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட் டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய அங்கீகாரம் கசெற் றிலும், சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஒவ்வொரு புதினப் பத்திரிகையிலும் வெளியிடப்படுதல் வேண் டும்.

நடவடிக் கைமுறை, விதித்து ரைக்கப் பட்ட வழி காட்டல் களை அடிப் படை யாகக் கொண் டிருக்க வேண்டும்.

23அஅ. கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையம் அங்கீகாரத்திற்கென அதற்குச் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களை அங்கீகரிப்பதில் அது பின்பற்றவேண்டிய நடவடிக்கை முறையைத் தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய நடவடிக்கைமுறைகள், அத்தகைய நோக்கத்திற்கென அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்தல்.

23ஆஆ. (1) அதன் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்க, ஒரு கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர்நிலையம் மறுக்குமிடத்து இன்னலுறுகின்ற ஆள் அல்லது ஆட்கள் குழு, அத்தகைய முடிவுக்கெதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்ய உரிமையுடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய மேன்முறையீட்டின்மீது அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

ஏதேனும் விதித்துரைக் கப்பட்ட கருத்திட்டத் தைக் கைவிடுதல் அல்லது மாற்றுதல்.

23இஇ. அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு எவையேனும் மாற்றங்கள் செய்யப்படுமிடத்து, அல்லது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் கைவிடப்படுமிடத்து, அத்தகைய அங்கீகாரத்தைப் பெற்ற அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்டமுறையான சபை, உள்ளூரதிகார சபை, கம்பனி, குழுமம், தனியாள் தோதான கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையத்திற்கு விடயத்திற்கேற்ப அத்தகைய மாற்றங்களை அல்லது கைவிடுதலை அறிவித்தல் வேண்டும்; அத்துடன் அவசியமானவிடத்து, ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்ற அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்குச் செய்வதற்கு முன்னப்பட்ட எவையேனும் மாற்றங்கள் தொடர்பில் புதிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறுயினும், கைவிடப்படும் அல்லது மாற்றப்படும் அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் அதிகார சபையின் ஒருப்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கருத்திட்டமாக இருக்குமிடத்து, அது பற்றி அதிகார சபைக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பெறத் தேவையான புதிய அங்கீகாரம் எதுவும் அதிகாரசபையின் ஒருப்பாட்டுடன் மட்டுமே வழங்கப்படுதலும் வேண்டும்.

அங்கிகரிக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

**23ஈஈ. கருத்திட்ட அங்கீகரிப்பு முகவர் நிலையங்களி**னல் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒவ்வொரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் பற்றி அறிக்கையொன்றை அதிகாரசபைக்கு அனுப்பிவைத்தல் அத்தகைய எல்லாக் கருத்திட்ட முகவர் நிலையங்களினதும் கடமையாதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

" நுழைவதற்கும், பார்வையிடுவதற்குமான தத்துவம்.

24அ. (1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினல் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் எந்தநேரத்திலும் ஏதேனும் காணியினுள் அல்லது வளவுகளினுள் நுழையலாம் என்பதுடன்—

(அ) ஏதேனும் சாதனத்தை அல்லது கைத்தொழில் பொறித் தொகுதியைச் சோதனை செய்யலாம், அத்துடன் பார்வையிடலாம் ;

(ஆ) அத்தகைய சாதனத்திலிருந்து அல்லது கைத்தொழில் பொறித்தொகுதியிலிருந்து வெளியிடப்பட்ட, வெளியேற்றப்பட்ட, அல்லது படியவிடப்பட்ட, அல்லது வழமையாக வெளியிடப்படும், வெளியேற்றப்படும் அல்லது படியவிடப்படும் ஒரு வகுப்பைச் சேர்ந்தனவாக அல்லது இனத்தைச் சேர்ந்தனவாக இருக்கும் சாத்தியம் கொண்ட எவையேனும் தீழ்ப்புக் காரணிகளின் மாதிரிகளை எடுக்கலாம் ;

(இ) அத்தகைய சாதனத்தின் அல்லது கைத்தொழில் பொறித்தொகுதியின் ஆற்றுகை அல்லது பயன்பாடு தொடர்பிலான அல்லது அத்தகைய சாதனத்திலிருந்தான அல்லது கைத்தொழில் பொறித்தொகுதியிலிருந்தான வெளிவிடுகை, வெளியேற்றுகை அல்லது படியவிடுகை தொடர்பிலான எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது ஆவணங்களை சோதனை செய்யலாம்;

(ஈ) அவர் அவசியமெனக் கருதுகின்றவாறு அத்தகைய சாதனத்தை அல்லது கைத்தொழில் பொறித்தொகுதியை புகைப்படம் எடுக்கலாம் அல்லது அத்தகைய சோதனை நெறியின் போது காணப்படும் எவையேனும் புத்தகங்களின், பதிவேடுகளின் அல்லது ஆவணங்களின் பிரதிகளைத் தயாரிக்கலாம்; அல்லது

(உ) அத்தகைய வளவுகளில் அல்லது அத்தகைய வளவுகளின்மீது கொண்டு நடாத்தப்படும் அத்தகைய வியாபாரத்தில், கைத்தொழிலில் அல்லது நடைமுறையில் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தக்கூடிய அல்லது வழமையாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் எரிபொருளின் பதார்த்தத்தின் அல்லது பொருளின் மாதிரியை எடுக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர், (1) உட்பிரிவின்கீழான அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் கடுமையான முட்டுக்கட்டைகளை எதிர்நோக்க நியாயமான காரணம் இருக்குமிடத்து, பொலிசு அலுவலருடன் ஏதேனும் காணியினுள் அல்லது வளவுகளினுள் நுழையலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அத்தகைய பார்வையிடலை நடாத்துவதில் அல்லது நுண்ணுய்வு செய்வதில் அல்லது தரவைப் பதிவதில் அல்லது மாதிரியை எடுப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைத் தடுக்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அதிகார சபை பணிப்புரைகளை வழங்குதல்.

24ஆ. (1) சூழலுக்கு சேதத்தை அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தும் சாத்தியம் கொண்ட ஏதேனும் அபிவிருத்திக் கருத்திட்டத்தில் அல்லது திட்டத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள எவரேனும் ஆளுக்கு அத்தகைய சேதத்தை அல்லது பாதிப்பை தடுக்கும் அல்லது தணிக்கும் முகமாக

எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமான பணிப்புகளை வழங்குவதற்கு அதிகாரசபை தத்துவம் கொண்டதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, நீதிவான், அதிகாரசபையினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய ஆள், அத்தகைய பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுக்கின்றவரையில் அத்தகைய கருத்திட்டத்தை அல்லது திட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கும்படி கட்டளையிடலாம்.

இடப்பரப்புகளை சூழல் பாதுகாப்பு இடப்பரப்புகளாக வெளிப்படுத்துதல்.

24இ. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரானவர் (இதனகத்துப்பின்னர் "பாதுகாப்பு இடப்பரப்பு" ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படும்) சூழல் பாதுகாப்பு இடப்பரப்பொன்றென ஏதேனும் இடப்பரப்பை வெளிப்படுத்தலாம்.

(2) ஓர் இடப்பரப்பை பாதுகாப்பு இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துவதான (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று, அத்தகைய இடப்பரப்பின் எல்லைகளையும் வரையறைகளையும் குறிப்பதன் மூலம் அத்தகைய இடப்பரப்பை வரைவிலக்கணப்படுத்தல் வேண்டும்.

பாதுகாப்பு இடப்பரப்புகளில் வேறு ஏதேனும் சட்டங்களின் ஏற்புடைமை.

24ஈ. (1) பாதுகாப்பு இடப்பரப்பென ஏதேனும் இடப்பரப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுடன் முரண்படுகின்ற ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பாதுகாப்பு இடப்பரப்பொன்றில் உள்ள ஏதேனும் திட்டமிடல் திட்டம் அல்லது கருத்திட்டம் அவ்விடப்பரப்பில் தொழிற்படுத்தப்படாதொழிய வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கும் காலம்வரை அதிகாரசபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய இடப்பரப்பின் இயற்கை அமைப்புசார் திட்டமிடுதலுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அமைச்சரானவர், அதிகாரசபையின் வேண்டுகோளின்படி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்திற்குக் காலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய தேதியிலிருந்து பயனுறுவதாக, அதிகாரசபையானது, அத்தகைய பாதுகாப்பு இடப்பரப்பில் திட்டமிடுதலுக்குப் பொறுப்பாகவிருக்கும் அதிகாரசபையாக இல்லாதொழிதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(4) பாதுகாப்பு இடப்பரப்பு ஒன்று தொடர்பில் 24 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கும் வரை, அதிகாரசபை தவிர்ந்த ஆள் எவரும், அத்தகைய பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடலும் அபிவிருத்தியும் தொடர்பான ஏதேனும் தத்துவங்களையும், கடமைகளையம், பணிகளையும் பிரயோகித்தலோ, புரிதலோ, நிறைவேற்றுதலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1), (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்து, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் :—

" (1) ஐந்தாம் உட்பிரிவுக்கு அமைவாக, அதிகாரசபை கட்டளை மூலம், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களுள், கடமைகளுள் அத்துடன் பணிகளுள் எவற்றையும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு, நியதிச்சட்டமுறையான சபைக்கு, உள்ளூரதிகார சபைக்கு அல்லது எவரேனும் பகிரங்க அலுவலருக்கு கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவத்தை அதிகாரசபை ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு, நியதிச்சட்டமுறையான சபைக்கு, உள்ளூரதிகாரசபைக்கு அல்லது எவரேனும் பகிரங்க அலுவலருக்கு கையளித்துள்ளவிடத்து விடயத்திற்கேற்ப, அத்தகைய அரசாங்கத் திணைக்களத்தின் கூட்டுத்தாபனத்தின் நியதிச்சட்ட முறையான சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் எவரேனும் அலுவலர் அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர், பணிப்பாளர் தலைமையதிபதி தாமாகவே தத்துவங்களை பிரயோகிப்பதாக இருந்திருப்பாரெனின், எந்தத் தத்துவங்களை அவர் பிரயோகிக்க இயன்றவராகவிருந்திருப்பாரோ அந்தத் தத்துவங்களுள் எதனையும் பிரயோகிக்கலாம்.

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

" (ஆ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு, நியதிச்சட்டமுறையான சபைக்கு அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர் ஊழியத்திலிடுபட்டிருக்கும் திணைக்களத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி அத்தகைய அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்டமுறையான சபை அல்லது பகிரங்க அலுவலர் தொடர்பில்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"தண்டனை எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படாத தவறுகளுக்கான தண்டம்.*

31. இச்சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளை ஆள் எவரும் மீறுகின்றவிடத்தும் அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்தும் அத்துடன் அது தொடர்பில் தண்டனை எதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டில்லாதிருக்குமிடத்தும் அத்தகைய ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவர் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஈராண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"ஒழுங்குவிதிகள்.*

32. (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது ஒழுங்குவிதிகள் எக்கருமங்கள் தொடர்பில் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகிறதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் ;

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றினதும் அல்லது அவற்றினுள் எதனதும் தொடர்பில் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) (i) நிறுவுகைகள் அல்லது உத்தேசிக்கப்பட்ட நிறுவுகைகள் தொடர்பில் திட்டங்களையும் அளவுக் குறிப்பீடுகளையும், தகவலையும் சோதனை செய்வதற்கு;

(ii) இச்சட்டத்தின்கீழ் உரிமங்களை வழங்குவதற்கு; அத்துடன்

(iii) தேவையான கண்காணிப்புக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு,

கட்டணங்களை அறவிடுதல்;

(ஆ) சூழலைப் பாதுகாப்பதற்கும், நலன்தரும் பயன்பாடுகளைப் பாதுகாப்பதற்குமான அல்லது தேசிய சூழல் கொள்கையை அல்லது வகுப்பாக்கத்தைச் செயல்படுத்துவதற்கென நியம அளவு குறிப்பீடுகள் அல்லது கட்டளைகள்;

(இ) உடனலத்திற்கு நச்சுத்தன்மையான, தீங்கிழைக்கும், தீங்குவிளைவிக்கும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பிற விவரணங்களினுள் வரும் ஏதேனும் கருமம், செயல் அல்லது விடயம் எனத் தீர்மானிப்பதற்கான நியம அளவுக் குறிப்பீடு அல்லது கட்டளைகள்;

(ஈ) ஏதேனும் பொருளை அது திரவமாயினுஞ்சரி திண்மமாயினுஞ்சரி அல்லது வாயுவாயினுஞ்சரி அல்லது கதிர் இயக்கம் சார்ந்ததாயினுஞ்சரி சூழலினுள் வெளியேற்றுதலை, வெளிவிடுதலை அல்லது படியவிடுதலைத் தடைசெய்தல் அத்துடன் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட எரிபொருளின் பயன்பாட்டைத் தடைசெய்தல் அல்லது ஒழுங்குபடுத்தல்;

(உ) சூழ்ந்துள்ள காற்றின் தன்மையின் நியம அத்துடன் வெளிவிடுகை நியம அளவுக்குறிப்பீடும் அத்துடன் வளிமண்டலத்தில் இருக்கக்கூடியவாறான அல்லது அதனுள் வெளியேற்றப்படக்கூடியவாறான ஏதேனும் பொருளின் ஆகக்கூடிய அனுமதிக்கக்கூடிய செறிவுகளைக் குறிப்பீடு செய்தலும்;

(ஊ) தீழ்ப்பை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் சாதனத்தின், வசதியின், வாகனத்தின் அல்லது வள்ளத்தின் பயன்பாட்டைத் தடைசெய்தல் அல்லது தீழ்ப்பைத் தடுக்கும் அல்லது குறைக்கும் வகையில் அதன் நிருமாணத்தை, நிறுவுகையை அல்லது தொழிற்பாட்டை ஒழுங்குபடுத்தல்;

(எ) தீழ்ப்பு எச்சரிக்கைகளை அல்லது விழிப்புகளை வழங்குவதற்கான தேவைப்பாடு;

(ஏ) கழிவுகளை அல்லது பிற தகனப்பொருட்களைத் திறந்தவெளியில் எரித்தலைத் தடைசெய்தல் அல்லது ஒழுங்குபடுத்தல்;

(ஐ) காணியின்மீது அல்லது காணியினுள் திண்ம அல்லது திரவ கழிவுகளைக் கையுதிர்ப்பதற்கான அமைவிடங்களைத் தாபிப்பதை ஒழுங்குபடுத்தல்;

(ஒ) ஆட்சேபனைக்குரிய இரைச்சலைத் தீர்மானித்தலும், சகிக்கக்கூடிய இரைச்சலுக்கான நியமங்களின் அளவுக்குறிப்பீடுகளும்;

(ஓ) உடனலத்திற்கு அல்லது சேமநலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவாறான அல்லது மாறான கலாசார விளைவுகள் உள்ளதான அல்லது தீழ்ப்பைத் தடுப்பதற்காக ஏதேனும் நீர்ப்பரப்பில் அல்லது நீர்ப்பரப்பைச் சுற்றிக் குளித்தலை, நீந்துதலை, வள்ளத்தில் செல்லுதலை அல்லது பிற செயற்பாட்டைத் தடைசெய்தல் அல்லது ஒழுங்குபடுத்தல்;

(ஔ) எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்களும், நிறுவனங்களும், அவற்றின் தொழில்நெறியின் போது எழக்கூடியவாறான இலங்கை உள்ளூர் நீர்ப்பரப்புக்களின் எண்ணெய்த்தீழ்ப்பு எதனையும் கையாளுவதற்குத் தேவையான அத்தகைய பதார்த்தத்தை அல்லது பொருளை அத்துடன் சாதனத்தைக் களஞ்சியப்படுத்தி வைக்கவேண்டும் என்னும் தேவைப்பாடு;

(க) தொழில் கொண்டுநடாத்தும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்கள், ஏதேனும் வியாபார வெளியகற்றுப் பொருள் எண்ணெய்யைக் கொண்டிருப்பதைக் குறைக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்திற்கு விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய சாதனத்தை நிறுவவேண்டும் என்னும் தேவைப்பாடு;

(ங) அதிகாரசபையின் முடிபிற்கெதிராக மேன்முறையீடு செய்தல் தொடர்பிலான நடவடிக்கை முறையை விதித்துரைத்தல்;

(ச) நகர, கிராமிய இடப்பரப்புக்களில் பார்வைக் குரிய காட்சிகள் தொடர்பிலான கருமங்கள்;

(ஞ) இடையூறான பொருட்களைக் களஞ்சியப்படுத்த லும், கொண்டு செல்லுதலும்;

(ட) வளிமண்டலத்திற்காயினுஞ்சரி, நீர்ப்பரப்பிற் காயினுஞ்சரி அல்லது மண்ணிற்காயினுஞ்சரி கழிவுகளையும் தீங்கு விளைவிக்கும் பொருட் களையும் கையுதிர்த்தல்; அத்துடன்

(ண) அபிவிருத்தியாளரினால் அல்லது இந்நோக்கத் திற்கென கடமை கையளிக்கப்பட்டவாறான குறித்துரைக்கப்பட்ட ஒரு மூன்றும் திறத்த வரினால் புரியப்படும் குறிப்பிட்ட சூழல் கண் காணிப்புக்கடமைகள் பற்றிய தேவைப்பாடு.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்ப துடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்த கைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன்பின்னர் வசதியாகக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப் பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கஞ் செய்யப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கஞ் செய்யப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) "நலமார்ந்த பயன்பாடு" என்று வரைவிலக்கணத்திற்கு முன்பாக பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

"காற்றுத்தீழ்ப்பு" என்பது தாவரங்களை, மிருகங்களை, மனி தர்களை, உயிரற்ற பொருட்களைப் பகிரங்கமாகப் பாதிப்ப தாக காற்றின் பௌதிக, இரசாயன, உயிரியல் பண்பு களில் ஏற்படும் விரும்பத்தகாத ஒரு மாற்றம் எனப் பொருளாகும்;

(ஆ) "சூழல்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவன் மூலம் :—

"சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீடு அறிக்கை" என்பது உத்தேச விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டமொன்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் சூழல்சார் விளைவுகள் பற்றிய எழுத்திலான பகுப்பாய்வொன்று, அத்துடன் சூழல்சார் செலவு நன்மைப் பகுப்பாய்வு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தால், சூழல்சார் செலவு நன்மைப் பகுப்பாய்வொன்று அடங்கியுள்ளதும் எனப் பொருளாகும் என்பதுடன், உத்தேச விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திலிருந்து தவிர்க்கப்படற்பாலதான அல்லது தவிர்க்கப்படற்பாலதல்லாத பாதகமான சூழல்சார் பாதிப்பு பற்றிய விவரணமொன்றையும், அத்துடன் சூழலுக்கு குறைவான தீங்குவிளைவிக்கக்கூடியதாக செயற்பாட்டிற்கான மாற்று நடவடிக்கை பற்றிய விவரணமொன்றை அத்தகைய மாற்று நடவடிக்கை ஏன் மறுக்கப்பட்டதென்பதற்கான காரணங்களுடன் சேர்த்தும், அத்துடன் உத்தேச விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தினல் தேவைப்படுத்தப்பட்ட மூலவளங்களின் ஏதேனும் எதிர்மாருக்கப்படற்பாலதல்லாத அல்லது, ஈடுசெய்யப்படற்பாலதல்லாத பொறுப்புக்களின் விவரணமொன்றையும் உள்ளடக்குகிறது ;

"சூழல் பரிசோதனை ஆரம்ப அறிக்கை" என்பது, அத்தகைய தாக்கங்கள் முக்கியமானவையா அல்லவா எனவும் சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதை இது தேவைப்படுத்துகின்றதா எனவும் தீர்மானிக்கும் கருத்துடன் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தின்மூலம் சூழலின்மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய மதிப்பீடு செய்யும் எழுத்திலான அறிக்கை என்று பொருளாகும், அத்தகைய அறிக்கை அமைச்சரினல் விதித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய மேலதிக விபரங்களையும் விவரணங்களையும் தரவுகளையும் தேசப்படங்களையும் வடிவமைப்புக்களையும் அத்தகைய வேறு தகவலையும் விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) "உள்ளூரதிகாரசபை" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கம் செய்து, அதற்கு பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் :—

"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது அபிவிருத்திசபை எனப் பொருளாகும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினல் பிரயோகிக்கப்படும், புரியப்படும், நிறைவேற்றப்படும் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை நேரொத்த அல்லது அவை போன்ற தத்துவங்களை, கடமைகளை, பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்று

வதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையை உள்ளடக்கும் ;

(ஈ) "உள்ளூர் அதிகாரசபை" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம்:—

"இரைச்சல் தீழ்ப்பு" என்பது சினமூட்டலை, சோர்வை, கேட்கும் ஆற்றல் இழத்தலை ஏற்படுத்துவதான அல்லது ஏனைய சப்தங்களின் புலனுணர்வுச் சக்தியுடனும் கவனத்தைத் திருப்புவதன் மூலமான பேச்சு ஒப்புளிப்புச் முயற்சியுடனும் தலையிடுவதான ஒரு மட்டத்தில் சப்தம் இருத்தல் எனப் பொருளாகும் ;

"தீழ்ப்புக்காரணி" என்பது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ—

(அ) ஏதேனும் நலன் தரும் பயன்பாட்டை பாதகமாகத் தாக்கும் வண்ணம் சூழலின் ஏதேனும் வாங்கு துண்டத்தின், அல்லது மூலக கூறின் தன்மையை மாற்றுவதான ; அல்லது

(ஆ) உடனலத்திற்கு இடையூறாக அல்லது இடையூறுகும் சாத்தியம் கொண்டதாக இருப்பதான,

திரவமாயினுஞ்சரி, திண்மமாயினுஞ்சரி, வாயுவாயினுஞ்சரி ஏதேனும் பதார்த்தம் எனப் பொருளாகும்.

(உ) "ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"நச்சுத்தன்மையான இரசாயானப்பொருள்" என்பது உயிர் வாழும் பொருட்கள் மீது தீமைபயக்கும் விளைவுகளைக் கொண்டிருக்கும் அல்லது சூழலில் இடையூறான மாற்றங்களை உண்டாக்கக்கூடிய திட்பமான அணுத்திரண்மஞ் சார்ந்த கலவையிலான இயல்பைக்கொண்ட பதார்த்தம் எனப்பொருளாகும்.